உ

சிவமயம்



புலோலியூர் அருள்மிகும்

# பருபத பத்தினி சமேத பசுபதீஸ்வரர்

# தோத்திரப் பதிகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/800/924 . சமயம்

**பதிப்புரிமை:–** ஆசிரியர் சிவகவிமாமணி ஆ. கதிர்காமத்தம்பியின் பின் புலோலியூர் பசுபதீஸ்வரர் தேவஸ்தானத்திற்கு

# நுன்முகம்

இளம் பராயந்தொட்டே அம்மை அப்பரால் ஈர்க்கப்பட்டுச் சரியைத் தொண்டுகளில் ஈடுபட்ட அடியேன் சைவப் பாடசாலையை ஸ்தாபித்து வளர்த்துவந்து தலயாத்திரைகள் பல செய்து வந்ததன் பலனாகக் கிரியைத் தொண்டுகளிலும் ஈடுபட்டுவரத் திருவருளால் ஈர்க்கப்பட்டு அடியேம் பெற்ற இன்பம் ஏனைய அன்பரும் பெறுதற்கு உதவியாக அருள் நூல்களாகிய வல்வெட்டி அருள்மிகு வேவில் வீரகத்தி விநாயகர் ஆலயத்தலபுராணம், சத்தி சிவனின் அருளாட்சி, வல்வெட்டி அருள்மிகு வேவில் வீரகத்திவிநாயகர் தோத்திரப் பாமலர்கள், பிள்ளையார் புராண வசனச்சுருக்கம், வல்வை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரிஅம்மன் அருளாட்சி, திருவிளையாடற்பூசைப் பாமலர்கள் என்பனவற்றை இலவசப் பதிப்புக்களாக எனது துணைவியாரின் உதவியுடன் வெளியிட்டு விநியோகிக்கத் திருவருள் பாலித்தது. சமீபத்தில் திருவருட்பயன் வசனரூபம் என்னும் அருள் நூலும் வெளியிடத் திருவருள் பாலித்தது.

தற்போது புலோலியூர் அருள்மிகு பர்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் வழிபாட்டில் ஈடுபட்டு வருகையில் அவர்களால் ஈர்க்கப்பட்டு உருவாகிப் பாராயணஞ் செய்யப்பெறுவதே **புலோலியூர் அருள்மிகும் பர்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் தோத்திரப் பதிகங்களாகும்.**

அவற்றை நூல்வடிவில் வெளியிடத் திருவருள் பாலித்துளது. அன்பர்கள் ஓதிப்பயன்பெறுவார்களாக.

சிவகவிமாமணி கவிஞர்
ஆ. கதிர்காமத்தம்பி
ஓய்வுபெற்ற அதிபர் வல்வெட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## புலோலியூர் பர்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் தோத்திரப் பதிகம்

திருச்சிற்றம்பலம்

முத்தியைத் தருவாய் போற்றி மூவரும் ஆனாய் போற்றி
சித்திகள் புரிவாய் போற்றி சிவபுரத் தரசே போற்றி
புத்திரப் பேற்றை ஈந்து போதமும் அளிப்பாய் போற்றி
பக்தரின் பவந்தீர் புலோலிப் பசுபதீஸ்வரனே போற்றி
1

சங்க வெண்குழையாய் போற்றி சங்கர சிவனே! போற்றி
மங்கை யோர் பாகா போற்றி மான்மழு தரித்தாய் போற்றி
ஐந்தெழுத் தோது வார்க்கு அருட்பதம் அளிப்பாய் போற்றி
நம்பினோர்க் கருளும் புலோலிப் பசுபதீஸ்வரனே! போற்றி
2

கண்ணப்பக் களித்தாய் போற்றி காலனை உதைத்தாய் போற்றி
மண்சுமந்து மகிழ்ந்தாய் போற்றி மதுரையை ஆண்டோய் போற்றி
வண்டாகி வழிக்குத் துணையாய் வந்தருள் ஈசா போற்றி
விண்ணோரும் விரும்பும் புலோலிப் பசுபதீஸ்வரனே போற்றி
3

தில்லையிற் கூத்தா போற்றி தென்னவர்க் குயிரே போற்றி
எல்லையில் உரனோய் போற்றி இமையவர் தலைவா போற்றி
தொல்லைசெய் சிறுநோய் தீர்க்கும் அருட்குறி தெரித்தாய் போற்றி
வல்வினை தீர்க்கும் புலோலி மகிழ்தரும் ஈசா போற்றி
4

இடபக்கொடியாய் போற்றி ஏற்றினை ஊர்ந்தாய் போற்றி
நடனம் புரிந்தே என்றும் நல்லுயிர் புரப்பாய் போற்றி
படருந் துயரந் தீர்த்தே பக்தரைக் காப்போய் போற்றி
நடமே யுவக்கும் புலோலி நாதனே போற்றி போற்றி
5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுதல் உடையோய் போற்றி கங்கையை அணிந்தோய்
போற்றி
திண்ணனின் அன்பிற் றிழைத்துத் திருமருங் களித்தோய்
போற்றி
கண்ணனின் கண்ணை ஏற்றுச் சக்கரம் ஈந்தோய் போற்றி
நண்ணினர் துயரந் தீர்க்கும் புலோலியூர் ஈசனே போற்றி
6

ஆனாயன் இசையைப் பருகி அரனுலகளித்தாய் போற்றி
கூனாரும் பாண்டி மன்னன் கூனினைத் தீர்த்தாய் போற்றி
தேனாரும் கொன்றை சூடித் திருநடம் புரிவோய் போற்றி
வானோர்க்கும் மருந்தாம் புலோலி வளர்சடை ஈசா போற்றி
7

இன்னருள் ஊற்றே போற்றி இசையினை உவப்போய் போற்றி
பண்ணிசைப் புலவா போற்றி பரவுவோர்க் கமுதே போற்றி
அன்புடன் தொண்டு செய்யும் ஆர்வலர்க் கரனே போற்றி
வன்பிணி தீர்க்கும் புலோலி மகிழ்தரும் ஈசா போற்றி
8

அன்னையாய் அணைப்பாய் போற்றி அப்பனாய்ப் புரப்பாய்
போற்றி
என்னையும் படைத்தாய் போற்றி இறையறி உணர்வு தந்து
உன்பணி செய்தே நாளும் உவப்புற வைத்தாய் போற்றி
புன்செயல் பொறுப்பாய் புலோலி ஈசனே போற்றி போற்றி
9

சித்தரிற் சித்தா போற்றி சிவபரம் பொருளே போற்றி
பத்தனாய்ப் பணிகள் செய்து பயன்பெற வைத்தாய் போற்றி
சித்தமே கலங்கி னேன்யான் செய்வது தேரேன் ஐயா
அத்தனே ஆள்வாய் புலோலி அப்பனே போற்றி போற்றி
10

திருச்சிற்றம்பலம்

புலோலியூர் பசுபதீஸ்வரர் தோத்திரப்பதிகம் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# புலோலியூர் பர்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் அந்தாதித் தோத்திரப் பதிகம்

திருச்சிற்றம்பலம்

அருளாளர் மனங்களிக்கும் அகமதிலே வீற்றிருந்து
அருளாட்சி செய்தென்றும் அருவினைகள் தீர்க்கின்ற
பர்வதவர்த் தனிசமேத பசுபதீஸ்வ ரனேயுன்தன்
திருப்பாதஞ் சரணடைந்தோம் தீவினைகள் தீர்த்தருள் வாய்
1

தீர்த்தருள வேண்டிநின்று திருப்பாதஞ் சரணடைந்த
பேர்புகழும் அம்புலியைப் பிடிசாபந் தணித்தருளிப்
பார் புகழுஞ் செஞ்சடைமேல் வைத்தபசு பதீஸ்வரனே!
ஊர்புகலும் வல்வினைகள் ஒழித்தருள வேண்டுவமே
2

வேண்டிநின்று குறையிரந்த வானோரின் மீதிரங்கித்
தீண்டிநின்று துயர்விளைத்துச் சீறிவந்த நஞ்சதனை
ஆண்டருள்நின் கரத்தேந்தி அணிமிடற்றில் அடக்கிவைத்த
ஆண்மைமிகும் பசுபதீஸ்வ ரனேதுயர்தீர்த் தருள்வாயே
3

அருளுருவாம் எம்பிரானே! அன்பரிடர் தீர்ப்பவனே!
மருவிவாழும் பர்வதவர்த் தனிமகிழ எந்நாளும்
திருத்தில்லை புலோலியாகத் திருநடனம் புரிபவனே!
அருள்புரிவாய் வருத்தங்கள் அனைத்துமிங்கு தொலைந்திடவே
4

தொலைநோக்காய் ஆலால சுந்தரற்கு வரமீந்தே
நிலையில்லா மனிதவாழ்வில் நிறுத்திவைத்துத் தோழனாகி
மலைவைநீக்கிக் கைலைசேர்த்து மகிழ்ந்திடச்செய் பேரருளே!
பலர்புகழும் புலோலியூர்ப் பசுபதீஸ்வ ரனேகாப்பாய்
5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பருளும் பெருமானே! கருதிவாழும் அடியார்கள்
கூப்பிய கைக் கரத்தராகிக் கோலமுமே சீர்குலைய
நாத்தழும்ப வேண்டநலி வுதீர்பசுப தீஸ்வரனே!
ஆற்றவழி தெரியாதே அலைகின்றோம் காத்தருள்வாய்

6

காத்திடவே திண்ணனாரின் கரம்பற்றி அருகுவைத்தோய்
பூத்திகழுங் கரத்துடனே போற்றிநிற்போர்க் கருள்பவனே!
வேற்றுவழி தெரியாதே வேதனையாற் துடிக்கின்றோம்
காத்தருள்வாய் கருணைக்க டலாம்பசுப தீஸ்வரனே!

7

ஈசுவரனே! இன்பநிலை அளிப்பவனே எந்நாளும்
ஆசில்லா அடியார்கள் அகமலரில் இருப்பவனே
ஆசுடையார்க் கெட்டாத அருங்கனியாய் மிளிர்பவனே!
பேசுபுகழ் பசுபதீஸ்வ ரனே!பேர ருட்குன்றமே!

8

குன்றுதோ றாடல்செய் குமரவேளை நடுவிருத்தி
இன்புறவே சோமாஸ்கந் தமூர்த்தியாகித் திகழ்பவனே!
நன்மைகள் செய்வார்க்கென்றும் நலமருளிக் காப்பவனே!
அன்னையாம் பர்வதவர்த் தனிமகிழும் அருள்வள்ளலே!

9

அருளுருவே! அடியார்கட் கடியானே! அடியார்கள்
உருகிநின்று வேண்டிடவே உறுவினைகள் தீர்ப்பவனே!
பெருகிவரும் வல்வினையாற் பீடையுறும் தமியேமை
அருள்மருக்தால் மீட்டருள்வாய் அப்பாப சுபதீசா!

10

திருச்சிற்றம்பலம்

**புலோலியூர் பர்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் அந்தாதித் தோத்திரப்பதிகம் முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அருள்மிகும் புலோலியூர் பர்வதவர்த்தனி அம்மையின் தோத்திரப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

அருள்மிகும் அன்னையாகி அனைத்துயிர்க்கும் அமுத மூட்டி
விருப்பொடு பசுபதீஸ்வ ரோடிணைந்து நின்றைந் தொழிலை
மருவிய ஆன்ம கோடி வளம்பெறவே யாற்றி யருளும்
பர்வத வர்த் தனித்தா யைப்பணிந்து துயரை ஒழிப்பாம்
1

திருவிளங்கும் சிவகாமி யாயும் திரிபுவன சுந்தரி யாயும்
பெருமதுரை மீனாட்சி யாயும் பீடுடைய மனோன்மணி யாயும்
மருவியநம் தாயாரே புலோலிப் பர்வதவர்த் தனியெனப் போற்றும்
அருள்வாரியாம் அன்னை அவளின்அருட்பாதஞ் சூடித் துதிப்பாம் 2

சங்கரி பைரவி என்றுந் தயாநிதி பார்வதி என்றும்
மங்கள தாரணி என்றும் மகேஸ்வரிமலைமகள் என்றும்
சங்கணி மாயவன் தனது சகோதரி என்றுமே நாளும்
இங்கிதப் பெயர்களை இயம்பி எந்தாயின் மலர்ப்பாதம் பணிவாம் 3

அருள்தரு நயனம் போற்றி அம்புய வதனம் போற்றி
திருநுதற் திலகம் போற்றி திருக்கர அபயம் போற்றி
திருவுடைத் தோள்கள் போற்றி துயரறி இதயம் போற்றி
பரிவுடைப் பர்வதவர்த்த னித்தாயே போற்றி போற்றி
4

தேவரும் இயக்கரும் மனிதருந் திருவுடைமுனிவரும் யாவரும்
ஆவது வேண்டியே இரந்திட அருள்புரி தேவியே! நீயுவந்
தார்வலர் உவப்புறும் வண்ணமே அருள்தரு பசுபதீஸ்வரனுடன்
ஆர்வமாய் வேண்டிடும் அடியேனின் உளமலர் அமர்ந்தருள் புரிகவே 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றும் இருந்தும் கிடந்தும் நின்னுடை நாமம் எந்நாளும்
இன்ப முடனே ஓதும் என்தலை மீதிற் பரிவுடனே
நின்பா தமலர் சூடி நின்னருள் பாலித் தருள்வாயே
உன்னன் பாதம் உள்ளம் உவந்துறை எம்தாய் பத்தினியே 6

திருநிறையுந் தோற்றம் மிக்க சிவக்கொழுந்தும் நீயும் அன்னாள்
திருமணஞ்செய் கோல முடனே தீவினையை அழித்த கற்றும்
அருங்காட்சி தந்து அவலஞ் செய்காலன் வருகின்றபோது
அருளாளன் என்ற ருள்வீர் பர்வதவர்த் தனியாந் தாயாரே 7

நிறைமதி புரையும் வதனமும் நீள்கயல் புரையுங் கண்களுடன்
மறைகளும் போற்றும் நெற்றியும் மங்கலந் திகழுந் திலகமுமாய்
இறைவனே மகிழும் மேனியும் இதமருள் கரமுந் துலங்கிடவே
அறைதரு காலன் கவர்கையில் அன்னையே தோன்றிக் காப்பாயே 8

குமரகுரு பரனஞ் ஞான்று கூறியநற் பிள்ளைத் தமிழை
உமதுளமும் பூரிப் படைந்தே ஒருசிறுமி யாகிவந்து
அமர்ந்தருளி முத்து மாலை அளித்தவளே! நாயேன் தானும்
எமதுதாயென் றுன்னைத் துதித்தேன் ஏற்றிடுவாய் எந்தா யாளே 9

தேவர்க்குத் தீமை செய்தமகிடாசு ரன்தனை வதைத்தவளே!
ஆர்வமோடு கௌரி நோன்பு அனுட்டிக்கும் பக்தர்க் கருள்பவளே
சீர்வகையாய் நவராத் திரியாந் திருப்பூசை தனக்குகந் தருள்பவளே
பாவவினை வாட்டு தம்மா பரிந்தருள்வாய் அருள்மிகுந் தாயாரே 10

திருச்சிற்றம்பலம்

**அருள்மிகும் புலோலியூர் பர்வதவர்த்தனி அம்மையின் தோத்திரப் பதிகம் முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவவினை வாட்டு தம்மா பரிந்தருள்வாய் அருள்மிகுந் தாயாரே

திருச்சிற்றம்பலம்

அருள்மிகும் புலோலியூர் பர்வதவர்த்தனி அம்மையின் தோத்திரப் பதிகம் முற்றிற்று.

உ

சிவமயம்

## சிவாலயங்களில் ஓதுதற்குரிய கூட்டுப்பிரார்த்தனை மலர்கள்

ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம்
ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம்
ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம்

அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
அலைகடல் மீமிசை நடந்தாய் போற்றி
அடிமுதல் நடுவும் ஆனாய் போற்றி
அரிய யன் காணா ஒளியே போற்றி
அட்டமா சித்தி உடையாய் போற்றி
அட்டமூர்த்தியாய் உள்ளாய் போற்றி
அம்பலத்தாடும் அரசே போற்றி
அம்பிகை பாகம் உடையாய் போற்றி
அன்பர் உள்ளத் தமுதே போற்றி
அஞ்சல் என்று அருள்வாய் போற்றி
ஆரா அமுதே அருளே போற்றி
ஆனந்த வாரியாம் இறைவா போற்றி
ஆரூர் அமர்ந்த அரசே போற்றி
ஆலவாய் அமர்ந்த அரனே போற்றி
இமையவர் தலைவா போற்றி
இன்பத்தின் ஊற்றே போற்றி
உலகினைப் படைப்பாய் போற்றி
உலகினைக் காப்பாய் போற்றி
உலகினை அழிப்பாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகினை இயக்குவோய் போற்றி
எங்கும் நிறைந்தாய் போற்றி
எல்லாம் உடையாய் போற்றி
ஐந்தொழில் புரிவாய் போற்றி
ஐம்பூத மானாய் போற்றி
ஒழிவற நின்ற ஒருவனே போற்றி
ஓங்காரப் பொருளாய் மிளிர்வோய் போற்றி
கங்கா தரனே போற்றி
கால காலா போற்றி
கடம்ப வனத்தாய் போற்றி
கல்யாண சுந்தரா போற்றி
கனகக் குன்றே போற்றி
கைலாச வாசா போற்றி
கிருபா நிதியே போற்றி
கீரனைத் தடிந்தோய் போற்றி
குருத்துரோகியை வதைத்தாய் போற்றி
கூற்றினைக் காலால் உதைத்தாய் போற்றி
குற்றாலத்துறை கூத்தா போற்றி
கொன்றைமாலை அணிவோய் போற்றி
சங்கர சிவனே போற்றி
சதாசிவ மூர்த்தியே போற்றி
சந்திர சேகரா போற்றி
சான்றோர்க்கு ஒளியே போற்றி
சிவபுரத் தரசே போற்றி
சிதம்பரக் கூத்தா போற்றி
தட்சணா மூர்த்தியே போற்றி
தடாதகை மணாளா போற்றி
தருமிக்குப் பொற்கிழி அளித்தோய் போற்றி
தாயுமாகிப் புரப்பாய் போற்றி
தில்லையிற் கூத்தா போற்றி
திரிபுர தகனா போற்றி
துரியங் கடந்தோய் போற்றி
துன்பம் துடைப்போய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஞ்சணி கண்டா போற்றி

நந்தனுக் கருளினோய் போற்றி

நரிபரியாக்கிய சித்தா போற்றி

நாரைக்கு முத்தி கொடுத்தோய் போற்றி

நீறு பூசிய நிமலா போற்றி

நிர்மலனாகிய சிவனே போற்றி

நெற்றிக் கண்ணை உடையாய் போற்றி

நேரலர் தமக்கு நெருப்பே போற்றி

பவவினை அறுக்கும் தேவே போற்றி

பார்வதி மகிழும் மணாளா போற்றி

புரங்களை எரித்தாய் போற்றி

புண்ணியர் தமக்கு அரனே போற்றி

மங்கள சொரூபா போற்றி

மான்மழு தரித்தாய் போற்றி

மண்சுமந்து களித்தாய் போற்றி

மாதுலனாகிக் காத்தோய் போற்றி

முப்புரம் எரித்த முதல்வா போற்றி

மூவரும் ஆன முதல்வா போற்றி

வளையல் விற்ற வணிகனே போற்றி

வாதவூரனை ஆண்ட மூர்த்தியே போற்றி

பவவினை நீக்கும் பசுபதீஸ்வரா போற்றி போற்றி

பரிவுடன் நோக்கும் பருபத பத்தினியே போற்றி போற்றி

புலோலியூர் ஒளிர அருள்செய் ஈசாபோற்றி போற்றி

புன்செயல் தடுத்தருள் பருபதபத்தினியே போற்றி போற்றி

தென்னாடுடைய சிவனேபோற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

தென்னாடுடைய சிவனேபோற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

தென்னாடுடைய சிவனேபோற்றி என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்சபேசா சிவசிதம்பரம்
சிற்சபேசா சிவசிதம்பரம்
சிற்சபேசா சிவசிதம்பரம்

ஓம் நம பார்வதி பதியே ஓம் அரகர மகா தேவா
ஓம் நம பார்வதி பதியே ஓம் அரகர மகா தேவா
ஓம் நம பார்வதி பதியே ஓம் அரகர மகா தேவா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

n.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org